Registered as a Newspaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 22 | 05-05-2003 | திங்கட்கிழமை | ஓசை 76

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical
கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.
வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா. (சி-7864)

### யசுகி அகாஷி, விதார் கெல்ஹேசன்தலைமையிலான

# ஜப்பான் - நோர்வே பிரதிநிதிகள் குழு பிரதமர் ரணிலுடன் நேற்றுச் சந்திப்பு

## சமாதானப் பேச்சுக்களை மீள அமைப்பது குறித்து தீவிரமாக ஆராய்வு

(கொழும்பு)

**நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தலைமையிலான குழுவும், ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷி தலைமையிலான குழுவும் நேற்று தனித்தனியே சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன. தற்போது சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தேக்கநிலையை சீர் செய்யும் நோக்கத்துடன் இப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன.**

நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் மற்றும் நோர்வே சிறப்புத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரைக் கொண்ட குழுவினர் நேற்று பிரதமரைச் சந்தித்துப் பேசசுவார்த்தை நடத்தியுள்ளனர்.

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தற்காலிக பின்னடைவை நீக்கி எவ்வாறு அதனை முன்னெடுத்துச் செல்வது என்பது பற்றி விரிவாக கலந்துரையாடியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் இன்று நோர்வே செல்லவுள்ளதாகவும் ஏனைய பிரதிநிதிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை சிறிலங்காவில் தங்கியிருப்பார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இச்சந்திப்பிற்கு முன்னர் ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷி தலைமையிலான

(08ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் பரவியுள்ள வதந்திக்கும் எமக்கும் தொடர்பு இல்லை

### விடுதலைப்புலிகள் அறிவிப்பு

(திருகோணமலை)

மூதூரில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற வேண்டும் என்று வதந்தி பரவியுள்ளது.

சில தீய சக்திகள் இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாகவும் இதற்கும் தமக்குமிடையில் எந்தவித தொடர்பும் இல்லை என்று தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

சமாதான நடவடிக்கைகளை குழப்பி இனங்களுக்கிடையில் மோதலைத் தோற்றுவிக்க முனையும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே வெளிவிவகார அமைச்சர் 14 ஆம் திகதி கொழும்பு வருகிறார்

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றசன் வரும் 14ஆம் திகதி சிறிலங்காவிற்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசு தரப்பினரையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் இவர் சந்திப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை சமாதான முயற்சிகளில் இந்தியா தீவிரமாக ஈடுபடும்

### சிறிலங்கா சமாதானச் செயலகம் தெரிவிப்பு

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா தீவிரமாக ஈடுபடவுள்ளது எனவும் நோர்வே, ஜப்பான் ஆகியவற்றின் தூதுக்குழுவிடம் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன எனவும் சமாதானச் செயலகம் கூறியுள்ளது.

ஜப்பானில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பான உச்சி மாநாட்டில் புலிகளும், இந்தியாவும் பங்குபற்றுவது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒஸ்லோவில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளவில்லை. ஆனால் வாஷிங்டனில் நடைபெற்ற மாநாட்டில் இந்தியா கலந்து கொண்டது.

இது தொடர்பாக அமைச்சர் மொறகொடவும், சமாதானச் செயல

(08ஆம் பக்கம் பார்க்க)

## மீளக்குடியேறிய மக்களை ஈ.பி.டி.பி. மிரட்டுகிறது

### பின்னர் பார்த்துக் கொள்வதாக எச்சரிக்கை

யாழ். மாவட்டத்தில் மீள்குடியமர்பவர்களை ஈ.பி.டி.பி யினர் மிரட்டி வருகின்றனர்.

துண்டுப் பிரசுரங்களைக் கொடுத்து அதனை வாங்க மறுக்கும் மக்களை உங்கள் பெயர் விபரங்களை நாங்கள் சேகரித்து வைத்துள்ளோம். பின்னர் உங்களை கவனிப்பதாகக் கூறிவருகின்றனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

### படையினருக்கு தகவல் வழங்கும்

## தமிழ் உளவாளிகளுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்காப் படையினருக்குத் தகவல் வழங்கும் தமிழ் உளவாளிகளுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

படையினருக்கு தகவல் வழங்குவோர் அண்மைக்காலமாக கொலை செய்யப்பட்டு வருவதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக படைத்துறை கூறியுள்ளது.

முப்படைகளுக்கும் உளவுத்தகவல்களை வழங்கியதுடன் அவர்களுடன் சேர்ந்து இயங்கிய தமிழ் உளவாளிகள் கடந்த ஒரு வருடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டுள்ளவர்களில் பலர் கடந்த காலங்களில் படையினரின் நீண்ட தூரம் ஊடுருவும் படையணியுடன் இணைந்து செயற்பட்டதாகவும் தெரியவருகிறது. இவர்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு

(08ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். படைமுகாம் இடமாற்றம் குறித்து ரணில் - படை அதிகாரிகள் விசேட பேச்சு

(கொழும்பு)

யாழ். நகர படைமுகாம்களை இடமாற்றுவது தொடர்பாக இந்த வார நடுப்பகுதியில் சிறிலங்காப் பிரதமர் படைத்துறை அதிகாரிகளோடு விசேட பேச்சுக்களை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ். நகரிலுள்ள படையினரின் தலைமையகத்தை கோட்டை மற்றும் அதனைச் சூழவுள்ளப் பகுதிகளுக்கு இடமாற்றும் அரசாங்கத்தின் யோசனைக்கு விடுதலைப்புலிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனையடுத்தே இந்த விசேட பேச்சுவார்த்தை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, திலக் மாரப்பன, மற்றும் சமாதானச்


(08ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை நிறுத்தம் பற்றி முழுநாள் விவாதம் கோருவோம்

### எதிர்க்கட்சித்தலைவர் அறிவிப்பு

சமாதானப்பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக முழுநாள் விவாதம் ஒன்றைக் கோர எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ச முடிவு செய்துள்ளார். விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிநிற்பது குறித்து அரசாங்கம் மௌனமாக இருந்து வருகிறது. அரசாங்கம் இது குறித்து மக்களுக்குப் பதில் சொல்லவேண்டும் என மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். முன்னரும் பாராளுமன்ற விவாதம் கோரப்பட்ட போதும் ரணில் விக்கிரமசிங்க அது

(08ஆம் பக்கம் பார்க்க)



தென்மராட்சிக்குச் சென்று பார்வையிட்ட விடுதலைப்புலிகள், தமிழ்க்கூட்டமைப்பினரையும், பாழடைந்து போயுள்ள கிராமத்தையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

### அரசாங்கத்திலிருந்து

## பதவி விலகுவதான பத்திரிகை செய்திகளுக்கு சொக்சி மறுப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் எனக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது என்று வெளியான செய்திகளை சிறிலங்காவின் நிதி அமைச்சர் சொக்சி மறுத்துள்ளார்.

தான் பதவி விலகும் நோக்கில் அரசாங்கத்திற்கு கடிதம் கொடுத்துள்ளதாக வெளியான செய்தியை அவர் திட்டவட்டமாக நிராகரித்துள்ளார் நிதி அமைச்சரான சொக்சி

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### ராஜ் தொழில்சார் பயிற்சி நிலையம்

தமிழ்., ஆங்கிலம், தட்டெழுத்து பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம். 01.05.2003 ஆரம்பம் 30.05.2003 அன்று வரை அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். இடம் பத்திமா சந்தி (மார்க்கோணி வானொலி திருத்துனர்) 09 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. (3209)

## அறுவருக்குப் பிணை

(மன்னார்)

மன்னார் தாழ்வுபாடு கடற்பரப்பில் சட்டவிரோதமான பொருட்களுடன் கைது செய்யப்பட்ட பள்ளிமுனை மீனவர்கள் அறுபேரும் தலா 25 ஆயிரம் ரூபா பிணையில் கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் பதில் நீதவானால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த வியாழக்கிழமை இரு படகுகளில் கடற்றொழிலுக்குச் சென்ற போது இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

## உயர் பாதுகாப்பு வலயம் குறித்து ஆராய

# யாழ்ப்பாண மனித உரிமைக் குழு அலுவலர் பலாலி படைத்தலைமை அலுவலகம் செல்வார்

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலர் பலாலி படைத்துறை தலைமை அலுவலகத்திற்கு செல்லவுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக பொதுமக்களால் கொடுக்கப்பட்டுள்ள 400 க்கும் அதிகமான முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு அவர் அங்கு செல்லவுள்ளார்.

கடந்த வாரம் யாழ். மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில் அதியுயர் பாதுகாப்பு வலயம் வர்த்தகமானி அறிவித்தலுக்கமைய அமுல் செய்யப்படவில்லை என்றும் பொதுசன பாதுகாப்புச் சட்டத்திற்கமைவாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளதால் அதுகுறித்தும் இந்தச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

# இவ்வாண்டு 76 செயற்கைக் கால்களை வெண்புறா நிறுவனம் வழங்கியது

(அலுவலக செய்தியாளர்)

வெண்புறா செயற்கை உறுப்பு நிறுவனம் இவ் ஆண்டு 76 செயற்கைக் கால்களை வழங்கியுள்ளது.

வெண்புறா நிறுவனம் மூலம் கடந்த 1994 ஆம் ஆண்டு முதல் 2003 ஆண்டுவரை 1616 செயற்கைக்கால்களையும்,95 முச்சக்கரவண்டிகளையும் 101 சக்கர நாற்காலிகளையும் 298 ஊன்றுகோல்களையும் 211 சப்பாத்துக்களையும் வழங்கியுள்ளது. இவைதவிர 12248 செயற்கை உறுப்புக்களையும் திருத்தியுள்ளதாக வெண்புறா நிறுவனத்தின் புள்ளி விபரக்குறிப்பு தெரிவிக்கின்றது. (பா)

# எரிபொருள் விலை உயர்வுக்கு பொ.ஐ.மு. கண்டனம்

சர்வதேச சந்தையில் எரிபொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் அரசாங்கம் எரிபொருட்களின் விலையை அதிகரிக்கிறது என பொதுசன ஐக்கிய முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

உலகில் தற்போது எரிபொருட்களின் விலையை உயர்த்தும் ஒரே நாடு சிறிலங்காதான் ஒவ்வொருநாளும் உலகசந்தையில் எரிபொருட்களின் விலை குறைந்து வருகிறது. ஏன் சிறிலங்கா மட்டும் உயர்த்துகிறது என பொ.ஐ.முன்னணி முக்கியஸ்தரான சரத் அமுனுகம கேள்வி எழுப்பியுள்ளார்.

# சமாந்தரமாக சைக்கிள்களில் செல்வோர் மீது நடவடிக்கை

போக்குவரத்து நெருக்கடிகளை ஏற்படுத்துவோர் மீது காவல் துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

சன நெரிசல் கூடிய ஏ.9 வீதியில் சமாந்தரமாக துவிச்சக்கர வண்டி ஓட்டிச்செல்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. வீதிவிபத்துக்கள் அதிகரிப்புக்கு இத்தகைய செயற்பாடுகளும் முக்கிய காரணமாக அமைகின்றன எனவும் இத்தகைய செயல்களைத் தடுப்பதன் மூலம் வீதிவிபத்துக்களை தவிர்க்கமுடியும் என்பதன் காரணத்தாலேயே மேற்படி நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் காவல் துறையினர் தெரிவிக்கின்றனர். அண்மை நாட்களாக வீதிகளில் சமாந்தரமாகச் செல்பவர்களை மறித்து அவர்களுக்கு வீதி ஒழுங்குகள் தொடர்பான அறிவுறுத்தல்களை காவல்துறையினர் வழங்குவதையும் அவதானிக்க முடிகிறது.

நேற்றைய தினம் மாத்திரம் 75க்கு மேற்பட்டவர்களுக்கு வீதி ஒழுங்கு தொடர்பாக அறிவுறுத்தி உள்ளதை அவதானிக்க முடிகிறது. (லோ)

# மணலாற்றுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 200 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படும்

## அமைச்சர் ஜெயலத் உறுதி

(கொழும்பு)

மணலாற்றுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த இருநூறு சிங்களக் குடும்பங்கள் விரைவில் மீண்டும் அப்பகுதியில் குடியேற்றப்படுவர் என சிறிலங்காவின் அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை கண்டியில் அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்கரைச் சந்தித்து உரையாடியபோதே மகாநாயக்கரிடம் அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

வடக்கு - கிழக்கில் சேதமடைந்த பௌத்த வழிபாட்டுத்தலங்களைப் புனரமைக்குமாறு பிரதமர் உத்தரவிட்டதை அமைச்சர் மகாநாயக்கரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இரு சிறிலங்காப் போலிஸாரின் துப்பாக்கிகளைக் காணவில்லை

மன்னார் சிறிலங்காப் பொலிசாரின் இரண்டு துப்பாக்கிகள் கடந்த வியாழன் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பள்ளிமுனை காவல் நிலையத்தில் கடமையிலிருந்த இரண்டு பொலிசாரின் ரி56 துப்பாக்கிகளும்,60 ரவைகள் மகசின்கள் என்பனவே காணாமல் போயுள்ளன.

இவ்விரு பொலிசாரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# மெய்வல்லுனர் தொழில்நுட்ப அலுவலர் பயிற்சிநெறி

(கிளிநொச்சி)

தமிழீழ விளையாட்டுத் துறையால் நடாத்தப்படவுள்ள மெய்வல்லுனர் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பயிற்சி நெறி எதிர்வரும் மே மாதம் 7ம்,8ம்,9ம் திகதிகளில் கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வம் உடையவர்கள் அன்றைய தினம் சமுகமளிக்கும்படி வேண்டப்படுகிறீர்கள். இதேபோன்று எதிர்வரும் 18ம் திகதி கிளிநொச்சியில் தமிழீழ விளையாட்டுத்துறையால் மெய் வல்லுனர் தொழில்நுட்ப அலுவலர் (ஆரம்ப நிலை) பரீட்சை நடாத்தப்படவுள்ளது. இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் தமிழீழ விளையாட்டுத்துறை தலைமையலுவலகத்தில் விண்ணப்பபடிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி கையளிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

# மகிந்தராஜபக்சவை கட்சியில் பதில் தலைவராக நியமிக்க சு.க.உறுப்பினர்கள் வலியுறுத்து

எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்சவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நியமிக்க வேண்டும் என அக்கட்சிப்பின் வரிசைப்பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இறுதியாக நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் இவ்வாறு வலியுறுத்தப்பட்ட போதிலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்விடயம் குறித்து கருத்து எதுவும் கூறவில்லை. பதில் தலைவர் ஒருவரை நியமிக்கும் விடயம் குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவும் இல்லை.

மகிந்த சமர வீர தலைமையிலான ஒரு குழுவினர் மகிந்த ராஜபக்ச பதில்தலைவராவதை முற்றாக எதிர்க்கின்ற அதேவேளை அவர்கள் அனுரா பண்டார நாயக்காவை அப்பதவியில் நியமிக்க வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் கட்சி ரீதியாக மகிந்த ராஜபக்சவுக்கே அதிக ஆதரவு இருக்கின்றமை கருத்துக்கணிப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இதேவேளை, எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் தானே பொ.ஐ.மு. வின் சனாதிபதி வேட்பாளர் என்றும் தனது சகோதரிக்குப்பின் கட்சித்தலைவரும்தானே யென்றும் அனுரா பண்டாரநாயக்க பொதுக்கூட்டங்களில் கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

# நெல்லை விற்பனை செய்யமுடியாது மன்னார் விவசாயிகள் பாதிப்பு

மன்னார் மாவட்ட விவசாயிகளின் நெல்லை கொள்வனவு செய்வதற்கு இதுவரையும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதமையால் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தப்போவதாக விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சீமாப்பிள்ளை சௌந்தர்நாயகம் தெரிவித்துள்ளார்.

கடந்த பெரும் போகச் செய்கை மன்னார் மாவட்டத்தில் 24 ஆயிரம் ஏக்கர் வயலில் மேற்கொள்ளப்பட்டு ஏக்கர் ஒன்றுக்கு 30 மூடைகளுக்கு அதிகமான நெல் விளைச்சல் கிடைத்தது. எனினும் அறுவடை செய்யப்பட்ட 20 வீத நெல்லைக்கூட விற்க முடியாமல் உள்ளனர்.

முருங்கன் ச.தொ.ச.நிறுவனம் மன்னார் மாவட்ட விவசாயிகளின் நெல் முழுவதையும் கொள்வனவு செய்ய முடியாத நிலையிலுள்ளது.

இதனால் வியாபாரிகள் ஒரு கிலோ நெல்லை 10 ரூபாவிற்கு கொள்வனவு செய்கின்றனர். பல்வேறு கஸ்டங்கள், செலவுகள் மத்தியில் விவசாயத்தினை மேற்கொண்டு அதன் பலனைப் பெற முடியவில்லை எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் 13 ரூபா 50 சதத்திற்கு ஒரு கிலோ நெல்லை கொள்வனவு செய்கின்றன. ஆனால், சங்கங்கள் தமது தேவைக்கேற்ப கொள்வனவு செய்கின்றன.

வெளிநாடுகளிலிருந்து பெருமளவு அரிசியைக் கொள்வனவு செய்யும் அரசு உள்ளூர் விவாசாயிகளின் நெல்லைக் கொள்வனவு செய்து அரிசியாக்கலாம் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர் என அவர் கூறியுள்ளார்.

# யாழ்ப்பாண நகரில் நிலை கொண்டுள்ள படையினரை வெளியேற்ற வேண்டும்

## அப்பாத்துரை விநாயகமூர்த்தி கடிதம்

யாழ். நகரில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்ற வேண்டும் என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். நகரிலுள்ள படையினரை மாநகர சபை எல்லைக்கு வெளியே கொண்டு செல்ல வேண்டும் அல்லது அவர்களை பலாலிக்கு இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

இது தொடர்பான கடிதம் ஒன்றை விநாயகமூர்த்தி சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

# அமெ. விசா மோசடி விவகாரம் மேலும் பலர் கைதாகலாம்

விசா மோசடி தொடர்பாக சிறலங்காவிலுள்ள அமெரிக்கத் தூதரக ஊழியர்கள் இருவர் கைது செய்யப்பட்டமையையடுத்து கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் எதிரொலியாக மேலும் பலர் கைதாகக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. சிறிலங்காத் தூதரகத்தில் விசா வழங்கும் பகுதியில் கடமை புரிந்த இருவர் விசா மோசடி தொடர்பாகவும் மக்களை கடத்திச் செல்வது தொடர்பாகவும் கைது செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே. கலிபோர்ணியாவிலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் இவர்கள் மீதான குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர்கள் கைதாகினர் மேலும் ஏழு பேர் இவ்வாறான குற்றச்சாட்டின் பேரில் இடைநிறுத்தப்பட்டதுடன் விசா வழங்கும் பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

## கால் நடை வளர்ப்போர் கூ.ச

# முல்லையில் பால் கொள்வனவு செய்து வவுனியாவிற்கு அனுப்பி வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

முல்லை. மாவட்ட கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் குமுழமுனை ஒட்டுசுட்டான் பகுதிகளில் இருந்து பால் கொள்வனவு செய்யப்பட்டு வவுனியா மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டுவருகிறது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் மேற்படி பகுதிகளில் இருந்து நாள் ஒன்றிற்கு 800 லீற்றர் பால் அனுப்பப்பட்டு வருகிறது. இச் செயற்பாட்டின் மூலம் 35 க்கு மேற்பட்ட கால்நடை வளர்ப்போர் பயன் அடைகின்றனர்.

இந்நடவடிக்கை இனிவரும் காலங்களில் பன்முகப்படுத்தப்பட்டு முல்லை மாவட்ட கால்நடை வளர்ப்பவர்களை இலாபம் அடையச் செய்து கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் நோக்குடனே மேற் கொள்ளப்படுவதாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (லோ)

# பாலங்களின் நடுவில் குழிகள் பயணிக்க மக்கள் அச்சம்

பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கிய வண்ணம் பயணம் செய்து வருகின்றனர் இவ் வீதியில் அமைந்துள்ள மூன்று பாலங்களில் வீதியின் நடுப்பகுதியில் பெரும் குழிகள் உள்ளன. இவற்றினால் ஆபத்து ஏற்படலாம் என பயணிப்போர் அச்சமடைந்துள்ளனர். (பா)

# அமெரிக்க ஆட்சியாளரின் போக்கைக் கண்டித்து உலக இலக்கியவாதிகள், கலைஞர்கள் அறிக்கை

(லண்டன்)


**கியூபா சனாதிபதி பிடல்காஸ்ரோவுக்கு ஆதரவாகவும் அமெரிக்காவைக் கண்டித்தும் உலகின் சிறந்த 160 இலக்கியவாதிகள், கலைஞர்கள் திரைப்பட நடிகர்கள் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.**

பிறநாடுகளின் இறையாண்மையில் அமெரிக்கா என்னும் ஒரு அதிகாரம் தலையிட்டு நாடுகளுக்கிடையில் சமாதானத் தாக்குதலைக் குலைக்கிறது என்று அந்த அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'நோபல்' பரிசு பெற்ற படைப்பாளிகளான கொலம்பியாவைச் சேர்ந்த காசியா மாஸ்ரல், தென்னாபிரிக்காவின் நவீன் கோடிம தென்னமரிக்கரான புகிராற்ரோ மன்சூ ஸ்பானியரான அல்டோல் போர் கிரஸ், எஸ்கிவல் போன்றவர்கள் இந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

கொலிவூட் திரையுலகின் புகழ் மிக்கவர்களும் இந்த அறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

உலகின் மனசாட்சிக்கு விண்ணப்பம் என்று மகுடம் இடப்பட்ட இந்த அறிக்கை மெக்சிக்கோவின் சமூகவியலாளரான டோட்லோ கொன்சிலாஸ் அவர்களால் கவனாவில் இடம்பெற்ற மேதின அணிவகுப்பின்போது வெளியிடப்பட்டது.

தேசிய சுயாதீன உரிமை எனும் சர்வதேச கொள்கைகளை உயர்த்திப்பிடிக்கவும் தேசிய சுயநிர்ணய உரிமை மற்றும் தேசிய நிகழ்வுகளை அந்நிய சக்திகள் மதிப்பதையும் நோக்கமாகக் கொண்டுதான் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்று கலைஞர்களும் எழுத்தாளர்களும் தெரிவிக்கின்றனர்.




'சார்ஸ்' நோயிற்கான அறிகுறிகள் தென்பட்ட சீன பல்கலைக் கழக மாணவர்கள் 400 பேரைத் தனிமைப்படுத்தி வைத்துள்ள போது அவர்கள் காலை உடற்பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.


இந்த அறிக்கையில் கையொப்பம் இட்டுள்ள 160 கலைஞர்களும் ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை அனைவரும் கண்டிப்பதாகவும் கூறியிருக்கின்றார்கள்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் சனாதிபதி ஜோர்ஜ் புஷ்சின் அடிமை என்றும் கொன்ரலிஸறைசை ஜோர்ஜ் புஷ்சின் சொந்த ஆலோசகர் என்றும் பாடகர் ஹரி பெலபேண்டோ சாடியுள்ளார்

75 கியூப மாற்றுக்கருத்தாளர்களை கியூபா கைதுசெய்திருந்ததை கண்டித்துள்ள அமெரிக்கா ஈராக் போலவே கியூபா மீதும் இராணுவத் தாக்குதலைத் தொடுக்கலாம் என்ற அச்சம் சூழ்ந்த சர்வதேச சூழலில் உலகெங்கும் போற்றப்படும் நோபல் இலக்கியவாதிகளின் ஆதரவோடு இந்த அறிக்கை வெளிவந்திருப்பது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தது என்று வாஷிங்டன் டைம்ஸ் தெரிவித்துள்ளது.



அமெரிக்க அமைச்சர் கொலின்பவலின் வருகையைக் கண்டித்து பெய்ரூட்டில் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்வதையும் அதற்குப் பாதுகாப்பளிக்கும் லெபனானில் கலகமடக்கும் பொலிஸாரையும் படத்தில் காணலாம்.'



குறூஸ் ஏவுகணையை நெறிப்படுத்த வல்ல அமெரிக்காவின் கடற்படைக்கப்பல் ஒன்றை சீன நீர் மூழ்கிக்கப்பல் ஒன்றிலிருந்து சீன கடற்படை அதிகாரி கண்காணிக்கிறார்.

## சிலியின் முன்னாள் அமைச்சர் உள்ளிட்ட 28 அதிகாரிகள் பொலிஸாரால் கைது


### - நிதி மோசடி குறித்தும் வழக்குத் தாக்கல்

(லண்டன்)

சிலி நாட்டில் முன்னாள் அமைச்சர் உட்பட 28 முன்னாள் அரசாங்க உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது மோசடிக் குற்றச்சாட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான ஒரு இலட்சத்து 70 ஆயிரம் டொலர் பணத்தை சட்டவிரோத ஒப்பந்தங்கள் மூலம் கையாடியதாக அரசாங்க பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய ஊழியர்கள் மீதும் பொது வேலைகள் அமைச்சர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்த பிரதிவாதிகள் சட்டவிரோத ஒப்பந்தங்களின் பின்னணியில் தனிப்பட்ட முறையில் இலாபம் சம்பாதிக்கும் நோக்கம் எதுவும் இல்லை என தெரிவித்துள்ளார்கள்.



ஈராக்கில் பாடசாலைகள் இயங்க ஆரம்பித்துள்ள நிலையில் கிளித்தெறியப்பட்ட சதாம் ஹுசைனின் படங்களை அள்ளி வகுப்பறையைத்துப்புரவு செய்யும் சிறுமிகள்

## எமது திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குக! அமெரிக்கா சிரியாவிடம் கோரிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் திட்டத்துக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று சிரியாவிற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லெபனான், சிரியா, அல்பேனியா மற்றும் ஸ்பெயின் நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் நேற்று முன்தினம் சிரியாவின் சனாதிபதியை சந்தித்துப் பேசும்போது இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

சிரிய சனாதிபதியுடன் தான் நடத்திய பேச்சுவார்த்தை கண்டிப்போடு நடந்தது என்று கொலின்பவல் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீதான போரின் பின்னணியில் சிரியா மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா முன்வைத்துவைத்த நிலையில் கொலின்பவல் நடத்தியிருக்கும் பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.



பாக்தாத்திலுள்ள சவுதி அரேபிய மருத்துவ மனையில் காயத்திற்கு சிகிச்சை செய்யும் ஈராக்கியினரையும் அழுது கொண்டிருக்கும் ஈராக்கியப் பெண்மணியையும் படத்தில் காணலாம்.

## பதவி நீக்கம்

(புதுடில்லி)

காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியின் அரசியல் செயலர் பதவியிலிருந்து அம்பிகா சோனி அகற்றப்பட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் செயற்குழுவையும் சோனியாகாந்தி விரிவுபடுத்தியுள்ளார்.

மூன்று புதிய உறுப்பினர்கள் காங்கிரஸ் செயற்குழுவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## பிரி. படப்பிடிப்பாளர் கொலை விசாரணை நடத்தக் கோரிக்கை

(லண்டன்)

பலஸ்தீனத்தில் இஸ்ரேலிய துருப்பினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர் உயிரிழந்த சம்பவம் குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்று பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

பாலஸ்தீன அகதிகள் முகாமில் இஸ்ரேலிய ராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தின் போது பிரிட்டிஷ் தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர் ஜேம்ஸ் மில்லர் கொல்லப் பட்டிருந்தது தெரிந்ததே.

# ஆசிரியர் கல்வியும் அதன் இன்றைய வளர்ச்சியும்

இலங்கை இன்று கல்வியில் உயர்ந்தோங்கி நிற்கின்றது. ஒப்பீட்டளவில் எழுத்தறிவு வீதத்தை அதிகமாகக் கொண்டுள்ள பெருமையும் இதற்கு உண்டு. இந்தப் பெருமையைப் பெற்றுத்தந்த பெருமை ஆசிரியர் சமூகத்திற்கே உரியது.

இலங்கையின் கலவியானது இதுவரை மாணவர்கல்வி, ஆசிரியர் கல்வி என்ற இருவகைகளாகவே இருந்தன. ஆனால் இன்று காலத்தின் தேவை கருதி பெற்றோர்கல்வியும் அறிமுக மாகின்றது. அதாவது பெற்றோர்களிடையே பிள்ளைகளின் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாகவும், கல்வியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பாகவும், பெற்றோருக்கு அறிவூட்டும் நோக்குடன் இலங்கையின் கல்வி வரலாற்றில் முதற்தடவையாக பெற்றோர் பாடசாலைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் கல்வி அறிவைஊட்டுவது ஆசிரியர்களே அந்த ஆசிரியர்களுக்கும் தனியான கல்வி வரலாறு உண்டு. அந்த வரலாறு நீண்டதாகும். இலங்கையில் ஆரம்பத்தில் பண்டைய இந்து பௌத்த கல்வி மரபுகளின் அடிப்படையில் குருகுலக்கல்வியே முக்கியத்துவம் பெற்றது. குரு தனது சீடர்களுக்கு அறிவையும் - அனுபவத்தையும், பாரம்பரியத்தையும் - பண்பாட்டையும் ஒப்புவிக்கும் செயல் முறையாக குருகுலக் கல்வி அமைந்திருந்தது.

குருவின் இல்லத்தை சூழ்ந்ததாகவே ஆசிரிய கல்வி மையங்கள் அமைந்திருந்தன. இன்றைய ஆசிரியர் கல்வியின் தோற்றமும் வளர்ச்சியும் இவற்றிலிருந்து ஆரம்பமானதெனலாம். ஏகாதிபத்தியக் கருத்துக்களைக் கொண்ட ஆட்சியாளர்களின் வருகையினால் இலங்கையின் ஆசிரியர் கல்வி முறைமை பாரம்பரியத் தன்மையிலிருந்து படிப்படியாக விடுபட்டு ஐரோப்பிய சாயலுக்குட்பட்டது.

இலங்கை ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் இருந்தகாலத்தில் எழுதுநர்கள், போதகர்கள், பரப்புரையாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் போன்றோருக்கு பயிற்சி அளிக்கும் நோக்கில் நோமல் பாடசாலை என்ற ஆசிரிய பயிற்சிப் பாடசாலை நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் தமக்கேற்ற, தமது நாட்டு முறையிலான ஆசிரிய பயிற்சிக்கல்லூரியை (Teachers Training College) அறிமுகப்படுத்தினர்.

**அனைத்து ஆசிரியர்களும் நியமனத் திற்கு முன்பே தொழில்சார் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.**

1943 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தத்தில் ஆசிரிய பயிற்சியின் முக்கியத் துவத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என "கன்னங்கராகுழு" தெரிவித்தது. அதன் அடிப்படையில் 1949ஆம் ஆண்டில் பட்டதாரிகள் ஆசிரிய நியமனம் பெறத்தகுதி அற்றவர்கள். அவர்கள் "கல்வி டிப்ளோமா" என்ற தொழில்சார் பட்டத்தைப் பெற்றிருந்தாலே ஆசிரிய நியமனத்திற்கு தகுதியானவர்கள் என்ற நோக்கில் இலங்கை பல்கலைக் கழகம் "கல்வி டிப்ளோமா"(Diploma in Education) பட்டம் வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இதே காலப்பகுதியில் இலங்கையின் இலவசக்கல்வியும் அறிமுகமாகியதால் கல்விகற்கவிரும்புபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையால். பாடசாலைகளின் எண்ணிக்கையையும் அதிகரித்துப் பாடசாலைகள் அதிக ரித்தமையால் ஆசிரியர்களும் அதிகளவில் நியமிக்கப்பட்டனர்.

1845ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் அறிமுகப்ப டுத்தப்பட்ட ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் 1960ஆம் ஆண்டில் அரச உடமையாக்கப்பட்டன. இதன் மூலம் ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கும் முழுப் பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொண்டது.

மேலும் கல்வி அமைச்சு பட்டதாரி ஆசிரியர்களுக்கு தபால் மூலக் கல்வி முறை மூலமும் பல்கலைக் கழகங்களின் வெளிவாரிக் கிளைகள் மூலமும் பயிற்சிகளை வழங்கியது. இதேவேளை, கல்வி அமைச்சால் புதிதாக நியமிக்கப்பட்ட முதன்மை ஆசிரியர்கள் (Master Teachers) மாவட்ட மட்டங்களில் பாடரீதியாக ஆசிரியர்களுக்கு சேவையுள் பயிற்சிகளை (In Service Training) வழங்கினார். இவர்களே இன்று ஆசிரிய ஆலோசகர்களாக (In Service Advisor) கடமையாற்றுகின்றனர்.

இவ்வாறான ஆசிரிய பயிற்சி நிலையங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஆசிரிய பயிற்சித்தேவைகளைத் திருப் திகரமாகப் பூர்த்திசெய்யாத நிலையில் ஆசிரிய பயிற்சித் தேவை தொடர்ந்து ஆதிகரித்துக் கொண்டே இருந்தது. இந்நிலையில் 1985 ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவகம்(National Institute of Education) அமைக்கப்பட்டதுடன் ஆசிரிய கல்வி பயிற்சி முறைகளில் பல மாற்றங்கள் எழுந்தன.

**தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு முன் சேவைப் பயிற்சித் திட்டத்தின் கீழ் மாணவர் கற்றலை ஊக்குவிக்கக் கூடிய பொறுப்பும், வகை கூறலும் உடைய ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் பாரிய பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.**

1980 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட கல்விச் சீர்திருத்த கல்வி வெள்ளை அறிக்கை யில் ஆசிரிய ஆட்சேர்ப்பு முறையிலும் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என முன்மொழியப் பட்டது. அதற்கமைய அனைத்து ஆசிரியர்களும் நியமனத்திற்கு முன்பே தொழில்சார் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும் எனக் கூறுப்பட்டது. இதற்கமைய இங்கிலாந்தில் உள்ள கல்வியியற் கல்லூரிகள் (college of Education) போன்றவற்றின் மூலம் வழங்கப் படும் ஆசிரிய சேவை முன் பயிற்சி (Pre Service Training) இலங்கைக்கும் மிகப்பொருத்தமானதெனக் கூறப்பட்டது.

முன்னாள் கல்வி அமைச்சரும் தற்போதைய பிரதம மந்திரியுமாகிய ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் இலங்கையில் 1985 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் முதலாம் திகதி ஆறு கல்வியற் கல்லூரிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு மைல்கல் போன்றதாகும். இக்கல்வியற் கல்லூரிகள் தேசிய கல்வி நிறுவகத்தின் அனுசரணையுடன் இயங்கவும் வழிவகுக்கப்பட்டன. இக்கல்வியியற் கல்லூரிகளுக்கு "கற்பித்தலில் தேசிய டிப்பிளோமா"(National Diploma in Teaching) பட்டம் வழங்கவும் படிப்படியாக "கல்விமானி" பட்டம் வழங்கவும் சட்ட மூலத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இக்கல்வியியற் கல்லூரிகள் 1998 ஆம் ஆண்டு முதல் தேசிய கல்வியியற் கல்லூரிகளாக (National college of Education) தரமுயர்த்தப்பட்டன. இந்தவகையில் இன்று இலங்கை முழுவதும் 17 தேசிய கல்வியியற் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவை வருடாவருடம் ஏறத்தாழ 8,000 ஆசிரியர்களை உருவாக்கித்தருக்கின்றன.

எதிர்காலத்தில் ஆசிரிய நியமனம் பெறுவ தற்கு தேசிய கல்வியியற் கல்லூரிகள் மூலம் தொழல்சார் பயிற்சி பெற்றிருத்தல் கட்டாயம் எனக் கூறப்படுகின்றது. எனவே தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு முன் சேவை பயிற்சித்திட்டத்தின் கீழ் மாணவர் கற்றலை ஊக்குவிக்கக் கூடிய பொறுப்பும் வகை கூறலுமுடைய ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பாரிய பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்கள் உட்பட பலரும் தேசிய கல்வியியற் கல்லூரி களில் அனுமதி பெற போட்டியிடுவது சமூகத்தில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு உள்ள நன்மதிப்பையும். விருப்பையும் எடுத்துக் காட்டுகின்றன.

**எதிர்காலத்தில் ஆசிரிய நியமனம் பெறுவதற்கு தேசிய கல்வியியற் கல்லூரிகள் மூலம் தொழில்சார் பயிற்சி பெற்றிருத்தல் கட்டாயம் எனக் கூறுப்படுகின்றது.**

ஆசிரிய கல்வியை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் இலங்கையில் உள்ள சகல மாவட்டங்களின் தேவையை அடிப்படையாகக் கொண்டு 84 ஆசிரியர் நிலையங்கள் (Teacher center) அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஹம்பகா, பதுளை, அநுராதபுரம் ஆகிய இடங்களில் ஆசிரிய கல்வி நிறுவனங்களும் (Teachers Institutes) அமைக்கப்படவுள்ளன. ஆசிரியர் நிலையங் களும்,ஆசிரியர் கல்வி நிறுவனங்களும், தேசிய கல்வி நிறுவகமும் ஆசிரியர் கல்விக்கான தேசிய அதிகார சபையின் (National Authority on Teacher Education) கீழ் இயங்க உள்ளன.

இவ்வாறு ஆசிரியர் கல்வியை மேம்படுத்த அரசு பல திட்டங்களைச் செயற்படுத்தினாலும் கூட அத்திட்டங்கள் வெற்றி அளிக்கின்றனவா? என்பது ஒவ்வொரு ஆசிரியரினதும் மனப்பாங்கில் தான் தங்கியுள்ளது.

**கண்டாவளையூர் ஆர். பாஸ்கரன்**

## திருமுறிகண்டி சூழலில் சுகாதாரம் குறித்துக் கலந்துரையாடல்

சுகாதாரச் சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக திருமுறிகண்டி வர்த்தகர்கள் தமிழீழ சுகாதாரப் பகுதி, பிள்ளையார் ஆலய நிர்வாக இணைப்பாளர், மாங்குளம் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர்கள் கலந்துகொண்ட கூட்டம் நேற்று முன்தினம் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கீழ் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வர்த்தக உணவகங்களில் குவியும் கழிவுப் பொருட்களை ஏற்றி தூர இடங்களுக்குக் கொண்டு சென்று போடுவதற்கான வாகன வசதிகளை மாங்குளம் அபிவிருத்தி நிறுவனம் செய்து கொடுப்பதெனவும் இதற்கான செலவினங்களை வர்த்தகர்கள் ஈடுசெய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

பிள்ளையார் ஆலய நிர்வாகம் சுத்திகரிப்பு தொழிலாளர் ஒருவருக்கான சம்பளத்தை வழங்க வேண்டும் என்றும் தீர்மானிக் கப்பட்டதோடு, பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினால் வளாகத்துள் தேங்கி நிற்கும் மழை நீரை அகற்றுவதற்கு கிடங்குகளை கிறவல் மண்ணால் உடனடியாக மூட வேண்டும் எனவும் தீர்மானிக் கப்பட்டது. இக்கூட்டத்திற்கு தமிழீழ சுகாதார சேவையின் கிளி. மாவட்ட பொறுப்பாளர் தலைமை வகித்தார். (09)

## பல்கலை மாணவர்— பொலிஸார் மோதல் சம்பவத்தில் 23 பேர் காயம்

(அனுராதபுரம்)

அனுராதபுரம் பல்கலைக்கழக மாணவர்களுக்கும்சிறிலங்காப் பொலிசாருக்கும் இடையே இடம் பெற்ற மோதல் சம்பவத்தில் 23 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

பொலிசார் மீது பல்கலைக் கழக மாணவர்கள் தாக்குதல் நடத்த முற்பட்டபோதே பொலிஸார் அவர்கள் மீது தாக்குதல் நடத்திய தாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஆங்கிலக் கல்வியை மேம்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை

சகல பாடசாலைகளிலும் ஆங்கிலக் கல்வியைப் போதிக்கும் நடவடிக்கைகளை மேம்படுத்த பாடசாலைக்கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட இருப்பதாக பாடசாலை கல்வி அமைச்சர் சுரணிமல ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதற்கமைய நாடு முழுவதிலும் உள்ள சுமார் 2000 ஆங்கில ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். இதேவேளை ஆங்கில ஆசிரியர்களின் கல்வி நடவடிக்கைகள் தரப்படுத்தப்படவுள்ள தாக அமைச்சர் மேலும் கூறினார்

## மாகாணமட்ட மரதன் ஓட்டப்போட்டியில் பற்றிமா றோ.க.வி. மாணவி முதலிடம்



வடகிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டித் தொடரில் கடந்தவாரம் இடம்பெற்ற பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத் தைச் சேர்ந்த செல்வி. விக்டர் டிவானியா டிலூசினி முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை வென் றுள்ளார்.

திருகோணமலையில் நடைபெற்ற போட்டியில் வெற்றியீட்டிய இவர் அகில இலங்கைப்போட்டியிலும் கலந்து கொள்ள உள்ளார். கடந்த வருடமும் மாகாணமட் டத்தில் முதலிடத்தைப் பெற்ற இவருக்கு ஊக்குவிப்புப் பரிசாக தமிழீழ விளையாட்டுத்துறை பதினையாயிரம் ரூபா பெறுமதியான வேகப் பயிற்சி இயந்திரம் ஒன்றை வழங்கியுள்ளது. புனித பற்றிமா றோ.க.வி மாணவியான இவர் பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக் கழக உறுப்பினருமாவார்

# தென்னை அபிவிருத்தியும் மக்களும்.........



தென்னை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் (முல்லை மாவட்டம்)

எமது தாயகப் பிரதேசத்தின் வளங்களில் தென்னை வளம் மிக முக்கியமானது. மக்களின் உணவுத்தேவையில் ஒரு பகுதியினை இவ்வளம் பூர்த்தி செய்கின்றது.

போரின் காரணமாக ஏற்பட்ட இராணுவ ஆக்கிரமிப்புக்களாலும் மற்றும் தாக்குதல்களாலும் இந்த வளம் அழிவுக்குள்ளாகி உள்ளது.

பாரிய தென்னந்தோட்டங்கள் மக்களின் இடம்பெயர்வு காரணமாகக் கைவிடப்பட்ட நிலையில் அழிந்துபோய் விட்டன.

ஆயினும் எஞ்சி உள்ள குறைந்தளவு தென்னை வளத்தின் மூலம் தற்போதைய தேவை ஓரளவு ஈடுசெய்யப்படுகின்றது.

போர் ஓய்ந்து சற்று சமாதான சூழல் தென்படுகின்ற இக்கால கட்டத்தில் நீண்டகாலப்பயன்பாடுடைய இந்த வளத்தின் பெருக்கம் தொடர்பாக அக்கறை செலுத்த வேண்டியது அனைவரினதும் கடமையாக உள்ளது.

வடக்குக் கிழக்குப் பகுதியில் 1988ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த தென்னை அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாதிருந்தன.

அரசாங்கத்தின் இன அழிப்பின் நடவடிக்கைகளின் ஒரு அங்கமாக அந்த இனத்தின் பொருளாதார வள அழிப்பும், வளத்தடுப்பும் மேற்கொள்ளப்படுகிறது. அந்த வகையில் தென்னை அபிவிருத்தியும் நிறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் இவ்வாண்டு தென்னை அபிவிருத்தி சபையால் மேற்கொள்ளப்படும் சில அபிவிருத்தி திட்டங்களெமது

பிரதேசங்களுக்கும் எட்டுவதற்கான வாய்ப்பு தென்படுவதாகத் தோன்றுகின்றது.

தற்போதைய சமாதான காலத்தில் எமது பிரதேசத்தை எட்டிப்பார்க்க முற்படும் பல அபிவிருத்தித் திட்டங்களுடன் தானும் ஒன்றாக தென்னை அபிவிருத்தித் திட்டம் தலைகாட்டி நிற்கின்றது.

ஆயினும் இத்திட்டமானது எவ்வளவுக்கு நடைமுறைச் சாத்தியமாகி எமது மக்களை சென்றடையப்போகின்றது என்பதை நோக்கும் போது அது பல சந்தேகங்களுடனேயே பார்க்கப்படவேண்டியதாக உள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரான செல்லத்தம்பி இரவீந்திரன் என்பவரை சந்திக்கும் நோக்குடன் நாம் அவரது அலுவலகத்திற்குச் சென்றோம்.

புதுக்குடியிருப்புக் கமநல சேவை நிலையத்தில் இவருக்கான ஒரு கதிரையும் மேசையும் வழங்கப்பட்டு இந்த உத்தியோகத்தர் கடமையில் இருந்தார்.

ஒரு மாவட்டத்தில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரே இரவல் அலுவலகத்தில் தனது பணிகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் மாவட்டத்தின் தென்னை அபிவிருத்தி பணி எவ்வாறு மேற்கொள்ளப் படப் போகின்றதென்ற சந்தேகம் அப்போதே எம்மைத் தொற்றிக் கொண்டது.

அவருடைய அலுவலகம் இவரது பணிக்கு போதுமானதாக இல்லாததால் அவர் தனது பணிகளை அலுவலக நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வீட்டில் வைத்தே மேற்கொள்கின்றார்.

அவருடைய வீட்டில் இருந்த மேசைகள் எல்லாவற்றிலும் தென்னை மானிய கோரிக்கைக்கான விண்ணப்பங்கள் மலைபோலக் குவிந்து கிடந்தன.

வியர்க்க விறுவிறுக்க அந்த உத்தியோகத்தர் தன்னந்தனியாக அவற்றை சீர்செய்யும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

அந்த வேளையில் இடையில் புகுந்து நாம் கேட்ட தகவல்களையும் அவர் எங்களுக்கு வழங்கினார்.


முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் போரின் காரணமாக இருபது லட்சத்து பதினான்காயிரத்து இருபத்தொரு தென்னைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இவை மதிப்பீடு செய்யப்பட்ட தொகையாக இருந்தாலும் உண்மையாக அழிவு இதைவிட அதிகமாகவே இருக்கும். தமது அழிவுகள் தொடர்பாக மக்கள் இதுவரை பூரணமான பதிவுகளை மேற்கொள்ளவில்லை.

இம்மாவட்டத்தில் நாயாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் தொடக்கம் செம்மலை, அளம்பில், முல்லைத்தீவு, மாத்தளன், கட்டைக்காடுவரை தென்னை செய்கைக்காக இயற்கையாகவே வளமான பிரதேசமாக காணப்படுகின்றது.ஏனைய பகுதிகளிலும் ஈரப்பாதுகாப்பினை மேற்கொண்டு தென்னை உற்பத்தி மேற்கொள்ள முடியும்.

இதனைவிடப் பயன்பாடுடைய அரச காணிகள் உள்ளன. இவை இந்த உற்பத்திக்காக பொதுமக்களுக்குப் பகிர்ந்து வழங்கப்பட வேண்டும்.

தென்னை பயிர்ச்செய்கை சபையால் தற்போது நான்கு மானியத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. புதுநடுகை, மீள்நடுகை, ஈரப்பாதுகாப்பு, நீர்ப்பாசனம் ஆகிய வற்றுக்காக மானியம் வழங்கப்படவுள்ளது.

புது நடுகைக்காக ஏக்கருக்குப் பதினாறாயிரம் ரூபா வீதம் அரை ஏக்கர் தொடக்கம் பத்து ஏக்கர் வரை மேற்கொள்வதற்கு வழங்கப்படவுள்ளது.



மீள் நடுகைக்காக 15,500 ரூபா அரை ஏக்கர் தொடக்கம் ஐம்பது ஏக்கருக்கு உட்பட்டதாக வழங்கப்படவுள்ளது.

இதேபோன்று விளைவு தரும் மரங்களின் ஈரப்பாதுகாப்புக்காக ஏக்கருக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவும் சொட்டு நீர்ப்பாசனத்திற்காக ஏக்கருக்கு ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இவற்றுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

பெருமளவானோர் இந்த மாவட்டத்தில் இருந்து இதற்காக விண்ணப்பித்துள்ளனர். இம்மாவட்டத்துக்கென தனி ஒருவராக இருந்து இப்பணியை மேற்கொள்வதால் பாரிய சிரமங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது.

உதவி ஊழியர்கள் இல்லாததால் பாடசாலை மாணவர்கள் சிலரது உதவியைப் பெற்றே தற்போதைய மானியத்திட்ட விண்ணப்பம் சீர்செய்யும் பணி மேற்கொள்ளப்படுகின்றது.

ஏனைய பிரதேசங்களில் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் ஒவ்வொரு தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரும் வெளிக்கள உத்தியோகத்தரும் கடமையில் உள்ளனர்.

ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஐந்து உதவி அரச அதிபர் பிரிவுக்கும் பொதுவாக ஒருவரே கடமையாற்றவேண்டியுள்ளது.

இதனால் தென்னை அபிவிருத்தி தொடர்பாக மிகவும் நேர்த்தியாகப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

தென்னை அபிவிருத்திக்கென இம்மாவட்டத்துக்குத் தனியான அலுவலகமும் மேலதிக உத்தியோகத்தர்களும் மிகவும் அவசியமாகத் தேவையாக உள்ளனர்.

இவ்வாறு தம்மாலான சில தகவல்களைத் தந்துதவினார். முல்லை மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்.

எது எவ்வாறாயினும் போரின் காரணமாக இப்பிரதேசமும், வளங்களும் அழிக்கப்பட்டிருப்பதுடன் பொருளாதார ரீதியாக இப்பிரதேச மக்கள் மிகவும் நொடிந்து போய் உள்ளனர்.

அழிந்து போயுள்ள தமது வளங்களை சீர் செய்து தம்மை வளப்படுத்தும் பணியில் இம்மக்கள் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**ஜெயக்குமார்**

தம்மைப் பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்கு கிடைக்கின்ற சிறு உதவிகளை அடிப்படையாகக்கொண்டு தம்மை வளம்படுத்த விளைகின்றனர்.

எனவே கடந்த காலங்கள் போன்று பதிவுகளும் கணக்கெடுப்பும் என நடவடிக்கைகள் இடம்பெறாது அபிவிருத்தி நோக்கியதாகப் பணிகள் இடம்பெறவேண்டும்.

இதற்கு அத்துறையுடன் தொடர்புடையவர்கள் இனிவரும் காலங்களிலாவது அவை மக்களை உரியமுறையில் சென்றடைவதற்காகப் பாடுபடவேண்டும்.

# தடுமாறிய வயோதிபரை காவல்துறை பொறுப்பேற்பு

## - உறவினர் தொடர்புகொள்ளக் கோரிக்கை



(அலுவலக செய்தியாளர்)

தம்பையா வைரமுத்து (வயது 90) மதிக்கக்கூடிய வயோதிபர் ஒருவர் கடந்த 1-05-2003 ஆம் திகதியன்று புளியங்குளம் சோதனைச் சாவடியில் இருந்து கிளிநொச்சிப் பகுதிக்கு வந்து சேர்ந்த பொழுது செல்லும் இடம் தெரியாது தடுமாறிய நிலையில் கிளிநொச்சி காவல் மணிமனையினரால் பொறுப்பேற்கப்பட்டு கிளிநொச்சி மூதாளர் பேணலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவரது உறவினர்கள் எங்கிருப்பினும் கிளிநொச்சி காவல் மணிமனையுடன் தொடர்புகொள்ளும் வண்ணம் கிளி. காவல் பணிமனைப் பொறுப்பாளர் ரஞ்சித்குமார் வேண்டியுள்ளார். (சோ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களின் காணிகள் குறித்த விபரம் திரட்ட குழு அமைப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளின் விபரங்களைத் திரட்டுவதற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை ஏறாவூர் நகர பிரதேச சபையின் மண்டபத் தில் நடைபெற்றுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் வீடமைப்புப் பிரதி அமைச்சருமான பசீர் சேகுதாவுத் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இதற்கென 10 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

– களுத்துறைச் சிறையில் –

# தொடர்ச்சியான சிறைவாசத்தால் கைதி ஒருவர் மனநோயாளியானார்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் கடந்த எட்டு வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவர் உளரீதியாக பாதிக்கப்பட்டு மனநோயாளி ஆகியுள்ளார்.

எஸ். தட்சணாமூர்த்தி (வயது 65) என்பவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையினாலேயே இவர் உளத்தாக்கத்துக்கு உள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

# நாவுலவில் ஒரே இடத்தில் மூவர் படுகொலை

(கொழும்பு)

சிறிலங்காவின் நாவுல பகுதியில் மூவர் ஒரே இடத்தில் கொலை செய்யப்பட்டுள்ளனர். இரண்டு சிறுவர்களும் கொலையுண்டவர்களுள் அடங்கியுள்ளனர்.

கொலைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை என்றும் விசாரணைகள் நடைபெறுவதாகவும் சிறிலங்காப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தொடர்பு கொள்ளவும்

மல்லாகத்தைச் சேர்ந்த சின்னையா ரமேஸ்வரன் கடந்த 12 வருடங்களாக தனது தாயாருடன் தொடர்பு கொள்ளாமல் உள்ளார். தயவு செய்து கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.



(2847)

சின்னையா ரமேஸ்வரன்

*திருமதி கனகமணி சின்னையா*
*கந்தவில்லா, மல்லாகம்.*
*தொலைபேசி - 021-2222710*

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப்பம் துணுக்காய் கல்வி வலயம்.

**துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் (துணுக்காய், மாந்தைகிழக்கு, ஒட்டுசுட்டான் பிரதேசச் செயலர் பிரிவுகள்) உள்ள ஆங்கில ஆசிரியர்கள் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

*தகைமைகள் :- க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் விசேட சித்தியுடன் (டீ அல்லது ஏ)*

*க.பொ.த. (உ.த) பரீட்சையில் யாதேனும் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.*

*தகுதியானவர்களுக்கு எழுத்துப் பரீட்சையும் நேர்முகப் பரீட்சையும் 21.05.2003 (புதன்) அன்று மு.ப. 10.00 மணிக்கு துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும். விண்ணப்பங்களை முன்கூட்டியே அனுப்பிவைக்கவும்.*

**மா. தேவேந்திரன்,** வலயக் கல்விப் பணிப்பாளர்,
துணுக்காய், யோகபுரம்.

(சி-9100)

## போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

**முல்லைத்தீவு மாவட்ட அரச அலுவலர்கட்கு சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் தேர்ச்சியினை வழங்கும் பொருட்டு துணுக்காய் கல்வி வலயத்தினால் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.**

*பயிற்சி வகுப்புக்கள் :- 01. ஆரம்பப் பிரிவு. 02. உயர் பிரிவு*

*என இரு பிரிவுகளாக நடைபெறும். ஆரம்பப் பிரிவு போதனாசிரியர்களுக்கு மணித்தியாலயம் ஒன்றிற்கான கொடுப்பனவாக ரூபா 250/- உம் உயர் பிரிவு போதனாசிரியர்களுக்கு மணித்தியாலம் ஒன்றிற்கான கொடுப்பனவாக ரூபா 350/- உம் வழங்கப்படும்.*

*தகைமை :- மொழிசார்ந்த (சிங்களம்/ஆங்கிலம்) பட்டதாரியாகவோ அல்லது மொழிசார்ந்த ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும். இளைப்பாறியவர்களும் இத்தகைமையுடைய ஏனையோரும் விண்ணப்பிக்கலாம். சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 09.05.2003இற்கு முன்பாக வலயக் கல்விப் பணிப்பாளர். வலயக் கல்வி அலுவலகம். துணுக்காய்.யோகபுரம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.*

**மா. தேவேந்திரன்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
துணுக்காய்.

(சி-8099)

# பணிநிலை வெற்றிடம்

சமையலாளர், சமையல் உதவியாளர் போன்ற பணிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் 2003.05.20ஆம் நாளுக்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரில் வருகை தரவும்.



**தகைமை :- உணவு வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.**

**குறிப்பு - திறமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற ஊதியம் வழங்கப்படும்.**

**நடுவப் பணியகம்**
**அறிவியல் நகர்**
**கிளிநொச்சி**

(சி-8101)



## சிந்தனைக்கு

சாவையும், அழிவையும், துன்பத்தையும் பரிசாகக் கொடுத்துத்தான் சுதந்திரம் எனும் சுவர்க்கத்தை நாம் காணமுடியும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 05-05-2003

## தமிழர் என்பதைத் தவிர...!

பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவைப் பதவி நீக்க வேண்டும் என முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், சிஹல உறுமயக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான கொட்டகதெனியாவின் கோரிக்கையானது இலங்கையில் இன வேற்றுமை எத்தனை தூரம் வேரூன்றிப் போயுள்ளது என்பதற்கு அண்மைய எடுத்துக் காட்டுகளில் ஒன்றாகக் கொள்ளத்தக்கதாகும்.

பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாகவும், அது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகிவிடும் என்பதே கொட்டகதெனியாவின் குற்றச்சாட்டாகும். ஆனால் கொட்டகதெனியாவிடம் இருந்து இத்தகையதொரு குற்றச்சாட்டு வெளிவருவது என்பது ஆச்சரியத்திற்குரியதொன்றல்ல. ஏனெனில் ஆனந்தராஜா பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற இருந்த வேளையிலும் கொட்டகதெனியா ஆனந்தராஜாவிற்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியே இருந்தார். அத்தோடு கொட்டகதெனியா சிஹல உறுமய கட்சியின் அங்கத்தவராக இருப்பதனால் அவரிடம் இருந்து இத்தகைய குற்றச்சாட்டு எதிர்பார்க்கத்தக்கதொன்றே ஆகும்.

ஆனால், கொட்டகதெனியாவினதோ, சிஹல உறுமயவினதோ, குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்ற, நியாயப்பாடற்றவை என்ற உண்மையைக் கூறவோ அன்றி ஆனந்தராஜாவின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தவோ இங்கு இவ்விவகாரத்தை நாம் சுட்டிக்காட்ட விளையவில்லை. அதாவது ஆனந்தராஜா பெயரளவில் தமிழர் என்பதால் அவர் தரப்பில் நின்று நியாயம் கற்பிக்க முனையவில்லை.

ஏனெனில் சிறிலங்கா பொலிஸ் சேவையானது இதுவரையில் சிறிலங்கா அரசின் ஒடுக்குமுறைச் சின்னங்களில் ஒன்றாகவே இருந்துள்ளது. பல இனப்படுகொலைகள், இன அழிப்பு நடவடிக்கைகள் என்பவற்றிற்கு அது பொறுப்பாக இருந்துள்ளது. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்ற போது முதலில் சிறிலங்கா பொலிஸாரே அடக்குமுறை நடவடிக்கைகளில் முக்கியமானவர்களாக இருந்தனர்.

ஆனால், இக் காலம் முழுவதிலும் ஆனந்தராஜா சிறிலங்கா பொலிஸ் சேவையில் பணியாற்றியே வந்துள்ளார். இவரின் படிப்படியான பதவி உயர்வுகள் யாவும் இக்காலப் பகுதியிலேயே இடம்பெற்றுள்ளன. மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிறிலங்கா ஆட்சியாளர்களே இப் பதவி உயர்வுகளையும் வழங்கியுள்ளனர். ஆகையினால், ஆனந்தராஜா தமிழருக்கு விரோதமாகச் செயற்பட்டாரோ இல்லையோ சிறிலங்கா பொலிஸ் திணைக்களத் திற்கும், சிறிலங்கா அரசிற்கும் விசுவாசமாகச் செயற்பட்டவராகவே இருந்திருக்க முடியும். அவ்வாறு இல்லாதுவிடில் இத்தகையதொரு படிப்படியான வளர்ச்சி நிலையை அவர் எட்டியிருக்க முடியாது.

ஆனந்தராஜா திறமையினாலும், கடின உழைப்பினாலும் இத்தகையதொரு உயர் நிலையை அடைந்திருக்கலாம் எனக் கூறுவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால், ஊழல் மோசடியும், அரசியல் தலையீடுகள் நிறைந்த சிறிலங்கா பொலிஸ் திணைக்களத்தில் திறமையும், கடின உழைப்புமே ஆனந்த ராஜாவை இவ் உயர் நிலைக்குக் கொண்டுவந்திருக்கும் என்பது கேள்விக்குரியதொன்றே ஆகும்.

ஆகையினால், நீண்ட காலமாக சிறிலங்கா அரசிற்கும், பொலிஸ் திணைக்களத்திற்கும் விசுவாசமாகச் செயற்பட்ட ஆனந்தராஜா விற்கு அதன் பலனாகக் கிட்டிய பொலிஸ்மா அதிபர் பதவியையே பறிக்குமாறு கொட்டகதெனியா கோருகின்றார். அவ்வாறு அவர் கோருவதற்கு ஒரே காரணம் அவர் தமிழர் என்பதினாலேயே ஆகும். இதனைத் தவிர இதற்கு வேறு காரணங்கள் எதுவுமே இருக்க வாய்ப்பில்லை.

சிறிலங்காப் பேரினவாதிகளைப் பொறுத்து சிறிலங்காவின் உயர் அதிகாரப்பீடத்தில் இருப்பவர்கள் அனைவரும் பௌத்த சிங்களவராகவே இருக்க வேண்டும். அதற்கு மாறான வகையில் வேறு இனத்தவரோ அன்றி மதத்தினரோ தமது திறமையின் காரணமாகவோ அன்றி சேவையின் காரணமாகவோ வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விடுமானால் அதனைப் பொறுத்துக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

ஆனால், இது சிஹல உறுமய போன்ற அதி தீவிரமான பௌத்த சிங்கள அடிப்படைவாதக் குழுவினர்களின் மனங்களில் மட்டும் தான் உண்டு என்பதல்ல. சிறிலங்காவை இதுவரையில் ஆட்சி செய்த சிங்கள அரசியற் கட்சிகளின் மனங்களிலுமே உள்ளன. ஆனால், அவற்றால் சில விடயங்களை - குறிப்பாக ஆனந்தராஜா போன்றவர்களின் நியமனங்களைப் புறம் தள்ளிவிட முடியாமல் போய்விடுகின்றது என்பதே உண்மையாகும்.

இவற்றை இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண முயற்சிகளை மேற்கொண்டுள்ளவர்கள் குறிப்பாக வெளிநாட்டினர் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது சிங்களவர்கள் மத்தியில் இனவாதம் என்பது எத்தனை தூரம் வேரூன்றி உள்ளது என்பதை விளங்கிக் கொள்ள இது வாய்ப்பாக அமையும். அப்பொழுது இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் எழக் கூடிய பிரச்சினைகள், நெருக்கடிகள் என்பவற்றை அடையாளம் காண இவை உதவக் கூடும். அதன் தீவிரத்தைபும் புரிந்துகொள்ள முடியும்.

# நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எதையும் புலிகளுக்கு அரசு வழங்காது!

## உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் எத்தகைய கோரிக்கைகளை முன்வைத்தாலும் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய எதனையும் அரசாங்கம் அவர்களுக்கு வழங்காது என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கண்டி சிறிதலதா மாளிகையின் பொலிஸ் காவல் நிலையத்திற்கு புதிய ஜீப் வண்டி ஒன்றை வழங்கிய பின்னர் இடம் பெற்ற நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை சிலர் திரிவுபடுத்தி குழப்பத்தை விளைவிக்கமுற்படுகின்றனர் எனக் கூறிய உள்துறை அமைச்சர் ஜப்பானில் கிடைக்கவுள்ள நிதி உதவிகள் வடக்குக் கிழக்கிற்கான திட்டங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளவில்லை. நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் மேற் கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஜப்பானில் கிடைக்கும் நிதி உதவி பயன்படுத்தப்படும் என்றும் உள்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

# அமைச்சரவையை முழுமையாக மாற்ற ஐ.தே. முன்னணி, அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

சிறிலங்காவின் அமைச்சரவையை வரும் ஜூலை மாதம் முழுமையாக மாற்றியமைக்க ஐக்கிய தேசிய முன்னணி. அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அழுத்தம் காரணமாகவே அரசாங்கம் இம்முடிவிற்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மீது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழுத்தம் கொடுத்து வருகிறார். முன்னதாக தொடர்பு சாதன அமைச்சு மீது தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த சந்திரிகா திட்டமிட்டிருந்தார். ஆனால் இப்பொழுது உள்துறை அமைச்சு மீது அவரது கவனம் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையை மாற்றியமைக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# வனவள பாதுகாப்புப் பிரிவின் முல்லை. செயலகம் திறப்பு

தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவின் முல்லை. மாவட்ட செயலகம் புதுக்குடியிருப்பில் கடந்த 25-திகதி காலை 11 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட செயலகத்தின் பெயர்ப் பலகையினை புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு பிறையாளன் திறந்து வைத்தார். மாவட்டச் செயலகத்தை தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவுப் பொறுப்பாளர் சத்தி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். வனவளப் பாதுகாப்புப் பிரிவு முல்லை.மாவட்ட அலுவலர் இ.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப் புரைகளை முல்லை. மாவட்ட கடற் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் மங்களேஸ், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஆகியோர் ஆற்றினார்கள்.

# வட- கிழக்கில் படைகள் விலகக்கூடாது கடற்படை மீது தலையீடு வேண்டாம்

## புலிகளைப் பேச்சுக்குத் தூண்ட வேண்டுமென்கிறார் அஸ்கிரியப் பீடாதிபதி

(கொழும்பு)

ஆயுதப்படைகள் வட-கிழக்கிலிருந்து விலகக்கூடாது. கடற்படை எதுவித தலையீடுமின்றித் தனது கடமையைச் செய்ய அனுமதிக்க வேண்டும் என அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய உடுகம சிறிபுத்தரகித்த தேரா் கூறியுள்ளார்.

அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன நேற்று முன்தினம் காலை மகாநாயக்கரைக் கண்டியில் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு வரும் வகையில் அவர்களைத் தூண்ட வேண்டும் என மேலும் அவர் கூறினார்.

### மொறகொட, பேணாட், அகாஷி, கெல்கேசன்

# இந்தியப் பயணத்தை முடித்து கொழும்பு வந்தடைந்தனர்

(லண்டன்)

இரு நாட்களாக இந்தியத் தலைநகர் புதுடில்லியில் பல்வேறு இந்தியத்தலைவர்களையும் இராஜீக அதிகாரிகளையும் சந்தித்துப் பேசிய சிறிலங்காவின் அமைச்சர் மிலிந்த மொறகொட சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக, நோர்வே நாட்டின் வெளியுறவுத் துறை துணை அமைச்சர் விதார் ஹெல்கேசன், ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷி ஆகியோர் நேற்று முன்தினம் தமது இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு வந்தடைந்துள்ளனர்.

இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரான நட்வர்சிங் உள்ளிட்ட பல இராஜீகத்துறை அதிகாரிகளையும் இவர்கள் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இலங்கையின் சமாதான நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை பற்றி பேசியதாக ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷி கூறியுள்ளார்.

இலங்கை சமாதான நடவடிக்கைகள் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மீண்டும் தொடங்கவேண்டும் என்று இந்தியா தீவிரமாக விரும்புகிறது என்றும் அகாஷி அவர்கள் கூறியுள்ளார்.

### -தமிழ்ச்செல்வன் அவர்களுடன் பேச்சு நடத்திய-

# கண்காணிப்புக் குழுவினர் நேற்று கொழும்பு திரும்பினர்

(அலுவலக செய்தியாளர்)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சன் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை கிளிநொச்சியிலிருந்து உலங்குவானூர்தி மூலம் கொழும்பு பயணமாகினர்.

நேற்றுக் காலை 7.55 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் வைத்துக் கண்காணிப்புக் குழுவினரை புலிகளின் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் வழி அனுப்பி வைத்தனர்.

மேற்படி குழுவினர் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுடன் கலந்துரையாடும் பொருட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி வந்திருந்தமை தெரிந்ததே. (சோ)




### -3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி-

# 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் மேற்கிந்தியத் தீவு 291/8 விக்கெட்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு விஜயம் செய்துள்ள அவுஸ்திரேலிய அணிக்கும் மேற்கிந்தியத்தீவு அணிக்குமிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது மேற்கிந்தியத் தீவு அதன் முதல் இனிங்சில் 8 விக்கெட்டுக்களை இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்திரேலியா அதன் முதல் இனிங்சில் 9 விக்கெட்டுக்களை இழந்து 605 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

ஸ்ரீவ்வோ 115 ஓட்டங்களையும், ரிக்கிபொண்டிங் 113 ஓட்டங்களையும், லீமன் 96 ஓட்டங்களையும், லாங்கர் 78 ஓட்டங்களையும், அண்டி பிச்சல் 71 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது 8 விக்கெட்டுக்களை இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கிறிஸ்கெய்லி 71 ஓட்டங்களையும், டி.சிமித் 59 ஓட்டங்களையும்,சர்வான் 40 ஓட்டங்களையும பெற்றனர். லாரா 14 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டம் இழந்தார்.

300 ஓட்டங்கள் முன் நிலையில் இருக்கும் அவுஸ்திரேலிய அணி இப் போட்டியிலும் வெற்றி பெறும் சாத்தியக்கூறுகளே பெரும்பாலும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். இல் நடந்த பல இன அழிப்புகளிற்கு கோட்டை இராணுவமே பொறுப்பாயிருந்தது!

## -மனித நேய அமைப்புக்களின் மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டைப் பகுதியில் இருந்த இராணுவத்தினரும், சிறிலங்கா பொலிசாரும் யாழ். நகரில் கடந்த காலத்தில் நடந்த பல இன அழிப்பு மற்றும் தமிழரின் பண்பாட்டு அம்சங்களின் சிதைப்புக்குக் காரணமாக இருந்துள்ளனர் என யாழ். கோட்டைப் பகுதியில் இராணுவத்தினர் மீள முகாம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். மனித நேய அமைப்புக்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப்படையினரின் முகாம் அமைக்கும் முயற்சிக்கு யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது குறித்து அறிக்கை ஒன்றையும் அவ் ஒன்றியம் வெளியிடவுள்ளது. இந்த அறிக்கையின் பிரதி போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவிற்கும் கையளிக்கப்படவுள்ளது.

இது யாழ்.மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இன்று கையளிக்கப்படவுள்ளது.

1981 ஆம் ஆண்டு யாழ். பொது நூலகம் எரிப்பு மற்றும் 1974ஆம் ஆண்டு தமிழராட்சி மாநாட்டில் தமிழர்கள் படுகொலை, யாழ். மத்திய கல்லூரி மாணவத்தலைவன் உட்பட பல உயிர்களும் சொத்துடைமைகளும் அழிக்கப்பட்டமை போன்றனவற்றிற்கு அக்காலப் பகுதிகள் கோட்டையிலிருந்த இராணுவத்தினரும், சிறிலங்கா காவல் துறையினருமே காரணமாகும்.

இதுபோன்ற நிகழ்வுகள் எதிர்வரும் காலங்களில் இடம் பெறக்கூடாது. பண்ணை மார்பு சிகிச்சை நிலையம், கிறிஸ்தவ தேவாலயம், மீனாட்சியம்மன் ஆலயம், மீன் சந்தை, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வீரசிங்க மண்டபம் மற்றும் டெலிகொம் உட்பட மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கான இடங்கள் இப்பகுதியிலேயே அமைந்துள்ளன. இதனைவிட தீவகத்திற்கும், யாழ்ப்பாணத்திற்குமான நுழைவாயில் இப்பகுதியிலேயே அமைந்துள்ளது. இப்பகுதியில் படைமுகாம் அமைக்கப்படுவதால் தீவகத்திற்கும், யாழ்ப்பாணத்திற்குமான தொடர்பு அற்ற நிலை ஏற்படும் என அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 52 பொது அமைப்புக்களின் ஏகோபித்தமுடிவே இவ் அறிக்கையாகும்.

### சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து

# அமெரிக்க, ரஷ்ய வீரர்கள் நேற்று பூமிக்குத் திரும்பினர்

சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்த அமெரிக்க மற்றும் ரஷ்ய விண்வெளி வீரர்கள் நேற்றுப் பூமிக்குத் திரும்பியுள்ளனர்

ரஷ்யாவின் சோயஸ் விண்கலத்தின் மூலம் விண்வெளி நிலையத்திற்குச் சென்ற இவர்கள் பூமிக்குத் திரும்பி ஹஜிகஸ்தானில் தரையிறங்கியுள்ளனர்.

தரையிறங்க வேண்டிய இடத்திலிருந்து 500 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் இந்த விண்கலம் தரையிறங்கியுள்ளதால் மூன்று மணித்தியாலங்களின் பின்னரே அவர்களை சென்றடைந்ததாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இவர்கள் கடந்த நவம்பர் மாதம் 9,500 கோடி அமெரிக்க டொலர் செலவில் நிறுவப்படும் பணிகளை மேற்கொள்வதற்காக விண்ணுக்குச் சென்றிருந்தனர்.



கொலம்பிய விண்கலம் விபத்துக்குள்ளானதால் இவர்கள் பூமிக்குத் திரும்புவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# வட்டக்கச்சியில் கால்நடை வளர்ப்போர் கவலை!

கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் வட்டக்கச்சிப் பகுதியில் எவ்வித செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

கால்நடை வளர்ப்பு சம்பந்தமான அறிவுறுத்தல்கள் எதுவும் மேற்கொள்ளப்படாது இருப்பதுடன் கால்நடைகளுக்கான பராமரிப்பு முறைகள் அவற்றுக்கு ஏற்படும் நோய்கள் கட்டுப்படுத்தும் முறைகள் போன்ற விழிப்புணர்வுச் செயற்பாடுகள் எதையும் மேற்கொள்ளவில்லை. அத்துடன் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க மானியத் திட்டங்கள் என்பவற்றை நடைமுறைப் படுத்தப்படாமல் உள்ளமை கவலை தருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சங்கத்தின் கடந்த வருட பொதுக்கூட்டத்தின் போது ஒவ்வொரு வாரமும் கால்நடை வளர்ப்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் செயற்பாடுகளை மேற்கொள்வது எனவும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேற்படி தீர்மானம் இரண்டு மாதங்கள் மாத்திரமே நடைமுறைப் படுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(லோ)

### மீளக்குடியேறிய...

அத்துடன் தீவகப் பகுதியில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்து வரும் ஈ.பி.டி.பி யினர் அதனை மக்களிடம் வலுக்கட்டாயமாகவும் திணித்து வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

### யாழ். படைமுகாம்...

செயலகப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக படைத்துறை அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெணாண்டோ வடபகுதிப் படைத்தளபதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தையில் சில தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என்று படைத்துறை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புத் தவிர்ந்த அரசியல் ரீதியாகவும் இந்தப் பிரச்சினை முக்கியம் பெறுவதால் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அனுப்பிய கடிதம் குறித்து உடனடித் தீர்மானத்தை எடுக்க முடியாதிருப்பதாக படைத்துறை அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்

### மூதூரில்...

இவ்வாறான தீய சக்திகள் தொடர்பாக மக்களை விழிப்பாக இருக்குமாறு திலக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### இலங்கை சமாதான...

கத் தலைவர் பேணாட் குணதிலகவும், இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந் சிங்காவுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியதாக சமாதானச் செயலகம் கூறுகின்றது.

### ஜப்பான் - நோர்வே...

குழுவினரும் பிரதமரை அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது சமாதான முயற்சிகள் உடனடியாக சரி செய்யப்படவேண்டியதன் அவசியத்தையும் டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் அது ஏற்படுத்தக்கூடிய சாதக பாதக விளைவுகள் பற்றியும் கலந்துரையாடியுள்ளனர்.

தற்போது கொழும்பில் தங்கிநிற்கும் இப் பிரதிநிதிகள் அடுத்த சில தினங்களில் வன்னிக்கு வந்து தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களைச் சந்திக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### இராணுவத்தினர் யாழ்.கோட்டைப்பகுதியில்

# கண்ணி வெடிகள் அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பம்!

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கையை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

கோட்டைக்குத் தெற்குப்புறமாக பண்ணைக் கடற்கரை ஓரமாகவுள்ள கடற்கரைப் பிரதேசம் உட்பட கோட்டையைச் சூழவுள்ள பகுதி பெருமளவு சிறிலங்காப்படையினரின் பொறியியல் பிரிவினரே இக் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கோட்டைப்பகுதியில் சிறிலங்காப் படையினர் தளம் அமைப்பதற்கு யாழ். மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கடும் எதிர்ப்பினைத் தெரிவித்துள்ள வேளையில் சிறிலங்காப் படையினர்கள் கோட்டைப் பகுதியில் வெடிபொருட்களை அகற்றுவது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் வருடப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கக் கோரல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நிலையத்தால் நடாத்தப்படும் கல்வி மானிப் பட்டக் கற்கை நெறியைத் தொடரும் முதலாம் வருட மாணவர்கள் தமது முதலாம் வருடப் பரீட்சைக்கு விண்ணப்பம் கையொப்பமிடுவதற்கு 06.05.2003 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்போ சிரேஷ்ட விரிவுரையாளர் ச.நாகரத்தினம் அவர்களுடன் புதுக்குடியிருப்பில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றார். மாணவர்கள் 750 ரூபா பணத்துடன் சமுகமளிக்க வேண்டும் எனவும் சமுகம் அளிக்கத் தவறுபவர்களது விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (26)

# ஈராக்கிற்கு இந். படைகளை அனுப்புமாறு அமெ. கோரிக்கை

(வாஷிங்டன்)

ஈராக்கில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட இந்தியாவிற்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது. ஈராக்கிய பொலிசாருக்கு உதவும் நோக்கத்துடனும் காயமடைந்த படையினரை அமெரிக்காவிற்குத் திருப்பி அனுப்புவதற்காகவுமே மேலதிகமாக இந்தியப் படையினரின் பங்களிப்பை தாம் கோருவதாக அமெரிக்கா தனது அழைப்பில் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து உரிய முறையில் இந்தியாவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த விவகாரம் குறித்து அமெரிக்க அதிகாரிகளும் இந்திய தேசிய பாதுகாப்புச் சபையின் ஆலோசகர் பிறயேஸ்மிஸ்ராவும் அடுத்தமாதம் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

# பிலிப்பைன்சில் இடம் பெற்ற மோதலில் எட்டு பொதுமக்கள் உட்பட 22 பேர்பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் தென்பகுதி நகரொன்றில் அரசாங்கப் படைகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் நேற்று இடம்பெற்ற மோதலில் இருபத்திரெண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர் என பிலிப்பைன்ஸ் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்டவர்களில் எட்டு பொதுமக்களும் அடங்குவதாக செய்திகள் தெரிவிக்கின்றன

மின்ரனாவோ என்ற தீவில் சியார்க்கோன் என்ற ஊரில் தெற்கு பிலிப்பைன்ஸ் தனி நாடு கோரி போராட்டம் நடத்திவரும் முஸ்லிம் சிறுபான்மை இனக்குழுவான மோரோ தீவிரவாதிகளுக்கும் அரசாங்கப்படைகளுக்குமிடையில் பல மணிநேரம் இந்த மோதல் இடம்பெற்றது.

# நெல் கொள்வனவிற்கு போதிய களஞ்சிய வசதியில்லை

## - பளை ப.நோ.கூ.சங்க முகாமையாளர்

(அலுவலக செய்தியாளர்)

பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் போதிய இடவசதி இல்லாத வேளையிலும் நெற் கொள்வனவில் ஈடுபட்டுள்ளது எனத் தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக மேற்படி சங்கத்திற்குச் சொந்தமான பெரும் களஞ்சியங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் மேற்படி பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்து பாதுகாப்பாக வைக்க முடியவில்லை எனவும் சங்க முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

போதிய களஞ்சியம் இல்லாத நிலையிலும் விவசாயிகளின் நன்மைகருதி 50,000 கிலோ நெல்லைக் கொள்வனவு செய்துள்ளதாகவும் விவசாய அங்கத்தவர் அட்டை உள்ளவர்களிடம் 910/- வீதமும் விவசாய அங்கத்தவர் அட்டை இல்லாதவர்களிடம் 850/- வீதமும் கொள்வனவு செய்வதாகவும் தெரிவித்த அவர் களஞ்சிய வசதியின்மையால் தொடர்ந்து கொள்வனவு செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

(லோ)

### பதவி விலகு...

இருக்கும் நிலையில் வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டில் கலந்து கொள்ள அமைச்சர் மிலிந்தமொறகொட சென்றிருந்தார் இதனைத் தொடர்ந்து வெளியான இந்த செய்தி எதிர்க்கட்சிகளின் விசமத்தனமான செயல் என்றும் தெரிவித்துள்ளார்.

### பேச்சுவார்த்தை...

குறித்து கவனம் செலுத்த வில்லை. எதிர்வரும் வியாழக்கிழமை விவாதம் நடத்தும்படி கோரவுள்ளோம் என அவர் மேலும் கூறினார்.

### தமிழ் உளவாளி...

பகுதிகளிலும் ஊடுருவ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் மற்றும் தளபதிகளுக்கெதிராக தாக்குதல்களை நடாத்தியுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது

# 2 வாரங்கள் மூடப்படும்

சார்ஸ் நோய் அச்சுறுத்தல் காரணமாக சீனத் தலைநகர் பீஜிங்கில் மேலும் இரு வாரங்களுக்கு பாடசாலைகளை மூடுவதென சீன அரசாங்கம் நேற்று முடிவு செய்துள்ளது.சார்ஸ் நோய் பரவல் குறைவடைந்ததால் இரண்டு வாரங்களுக்கு முன்னர் பாடசாலைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சீன அரசு அறிவித்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை சார்ஸ் நோய்த் தாக்கத்தின் காரணமாக மேலும் ஏழு பேர் மரணமடைந்துள்ளனர் என்றும் சீன அரசாங்கம் அறிவித்துள்ளது.

### -களுத்துறைச்சிறைச்சாலையிலுள்ள-

# 71 கைதிகளை விடுவிக்குமாறு சனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

களுத்துறைச்சிறையிலுள்ள 71 தமிழ் அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் சிறிலங்கா சனாதிபதியைக் கோரியுள்ளார்.

இது குறித்து பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ள அவர் கைதிகளின் விடுதலை குறித்து சனாதிபதியுடன் கலந்தாலோசிக்கநேரம் ஒதுக்கித்தருமாறும் கேட்டுள்ளார்.

கைதிகள் விடயம் தொடர்பாக பேசுவதற்கு புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்களைச் சந்திக்க தான் முயன்று வருவதாகவும் இந்தக் கடிதத்தில் மனோகணேசன் கூறியுள்ளார்.

### சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்

# வருடாந்த மாநாட்டிற்கு முன் ஜே.வி.பி. யுடன் கூட்டு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வருடாந்த மாநாடு இம்மாதம் 25 ஆம்திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டிற்கு முன்னர் தமது கட்சி ஜே.வி.பி யுடன் கூட்டுச்சேரும் என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற் சங்க தலைவரும் மேல் மாகாண ஆளுநருமான அலவி மௌலானா கூறியுள்ளார்.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த நிலையில் கூட்டுஉடன்படிக்கை தயாரிக்கப்பட்டு இருதரப்பிலும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.